# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

8069855

C

1. District : மாவட்டம் புதுக்கோட்டை
   PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
   Year ஆண்டு 2020
   FIR No.: மு.த.அ. எண் 09/2020
   Date நாள் 02.12.2020

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act. 2018 — Sections பிரிவுகள்: 7(a) of Prevention of Corruption (Amendment) Act. 2018.
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை 19.11.2020 மற்றும் 01.12.2020
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.12.2020
   Time : நேரம் 08.45 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் வட்டாட்சியர் அலுவலகம், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், சுமார் 40 கி.மீ வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. ராஜீவ் காந்தி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அய்யா [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.07.1989
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்
   (g) Address : முகவரி எண். 96/32 ஆ, வடக்குத் தெரு, கோமாபுரம் கிராமம், கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. செல்வ கணபதி, மண்டல வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கந்தர்வகோட்டை. (2) திரு. [illegible], பிர்கா சர்வேயர், வட்டாட்சியர் அலுவலகம் கந்தர்வகோட்டை. (3) திரு. ஜெரோம், கிராம நிர்வாக அலுவலர், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், 02.12.2020ம் தேதி காலை 08.45 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது அ.ராஜீவ்காந்தி, வயது 31/2020, த/பெ அய்யாமுத்து, எண்.96/32 ஏ, வடக்குத்தெரு, கோமாபுரம் கிராமம், கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப் செய்த ஒரு புகார்மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புனர், அ.ராஜீவ்காந்தி, வயது 31/2020, த/பெ அய்யாமுத்து, எண்.96/32ஏ, வடக்குத்தெரு, கோமாபுரம் கிராமம், கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் பெறுநர், உயர்திரு. காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், புதுக்கோட்டை அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது தந்தை திரு.அய்யாமுத்துக்கும், எனது பெரியப்பா திரு.மாரிமுத்துவுக்கும் சொந்தமாக சுமார் 13 ஏக்கர் நஞ்சை புஞ்சையாக விவசாய நிலம் பல்வேறு சர்வே

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 02.12.2020

Name: பெயர் ..........MANIMOHAN.
Rank: நிலை DSP.............. No. எண் .........
DSP VAC PDK.

எண்களில் கூட்டாக உள்ளது. என்னுடைய தந்தை கடந்த 04.11.2018-ஆம் தேதி இறந்துவிட்டார். அதனால் மேற்படி நிலங்களில் எனது தந்தைக்கு சேர வேண்டிய பங்கு நிலத்தை என் பெயருக்கும், எனது தம்பி ராஜ்குமார் பெயருக்கும், எனது அம்மா முத்துலெட்சுமி பெயருக்கும் பாகப்பிரிவினை செய்து அதை ஆவண எண்.1668/2020 நாள்.13.10.2020-ன்படி கந்தர்வக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம். அதன்பிறகு கந்தர்வக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து எங்கள் பெயருக்கு முழு புல பட்டா மாறுதலுக்கான கடிதம் கோமாபுரம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கும், கந்தர்வக்கோட்டை பிர்கா சர்வேயர் அலுவலகத்திற்கும் இணையதளம் மூலமாக அனுப்பப்பட்டது. அதன்பிறகு நானும் எனது நண்பர் திரு.முருகேசனும் கடந்த 19.11.2020-ஆம் தேதி சர்வே எண்.166.10, 166.11 மற்றும் என்னுடைய தம்பி ராஜ்குமார் பெயரில் உள்ள சர்வே எண்.93-9, 93-12, 218-14, 252-17, 252-4ஙி, 253-3கி ஆகிய இடங்களுக்கு முழு புல பட்டா பெறுவது சம்மந்தமாக கோமாபுரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோம் அவர்களை சந்தித்தோம். அவர் மண்டல துணை வட்டாட்சியர் திரு.செல்வகணபதியிடம் அழைத்து சென்றார். நாங்கள் மேற்படி திரு.செல்வகணபதியை பார்த்து மேற்படி எங்களுடைய இடங்களுக்கு முழு புல பட்டா மாறுதல் செய்துதர கேட்டதற்கு அவர் முழு புல பட்டா மாறுதல் செய்துதர எனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் தரஇயலாது என்று சொன்னதற்கு நீங்கள் பணக்காரர் தானே கொடுக்கலாம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் ஒன்றும் சொல்லாமல் அவரது அறையிலிருந்து நானும், எனது நண்பர் முருகேசனும், கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோம் அவர்களும் வெளியே வந்து, அதே அலுவலகத்தில் இருக்கும் கந்தர்வக்கோட்டை பிர்கா சர்வேயர் திரு.முத்து அவர்களை சந்தித்து சர்வே எண்கள் 164-4, 164-5, 251-13-இல் கண்ட எனது பங்கு நிலங்களுக்கும், சர்வே எண்.246-1கி1, 246-1கி2, 250-7, 250-2ல் கண்ட எனது தம்பி ராஜ்குமாரின் பங்கு நிலங்களுக்கும் சேர்த்து ஏழு இடங்களுக்கு பட்டா மாறுதல் செய்து தரும்படி கேட்டேன். அதற்கு சர்வேயர் திரு.முத்து அவர்கள் ஏழு இடங்களுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் கேட்கிறீர்கள். ஒரு நிலத்திற்கு ரூ.5,000/- வீதம் ஏழு இடங்களுக்கு ரூ.35,000/- கொடுங்கள். நான் உங்களுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னேன். நீங்கள் பணம் கொடுக்கும் போதுதான் உங்களுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் வழங்க ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். அதற்கு நான் ஒன்றும் சொல்லாமல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் என்னுடைய நண்பர் முருகேசன் ஆகியோருடன் வெளியே வந்துவிட்டேன். அப்போது கிராம நிர்வாக அலுவலர்

திரு.ஜெரோம், என்னிடம் நீங்கள் கவலைப்படாதீர்கள் நான் சர்வேயர் முத்துவிடமும், மண்டல துணை வட்டாட்சியர் செல்வகணபதியிடமும் உங்களுக்காக தனிப்பட்ட முறையில் பேசி பணம் குறைச்சுக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். அதன்பிறகு நேற்று 01.12.2020–ஆம் தேதி நானும், எனது நண்பர் முருகேசனும் மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக மண்டல துணை வட்டாட்சியர் திரு.செல்வகணபதி அவர்களை அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்தோம். அப்போது என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்யமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.5,000/– மட்டும் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோமிடம் கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நானும் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு கிராம நிர்வாக அலுவலர் ஜெரோமை சந்திக்க அவரது அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது கிராம நிர்வாக அலுவலர் அவரது அலுவலகத்திற்கு கீழே ரோட்டில் நின்றார். அவரிடம் நடந்த விபரம் பற்றி சொன்னேன். அதற்கு அவர் ரூ.5,000/– கொடுங்கள் நான் வேலையை முடித்து தருகிறேன். எனக்கு மேற்படி ரூ.5,000/–திலிருந்து ரூ.1,000/– மட்டும் எடுத்து கொள்வேன், மீதி பணத்தை மண்டல துணை வட்டாட்சியர் செல்வகணபதி அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். மேலும் கந்தர்வக்கோட்டை பிர்கா சர்வேயர் திரு.முத்துவிடம் செல்போனில் பேசிவிட்டு அவருக்கு ரூ.10,000/–மாக குறைத்துக்கொண்டு என்னை வாங்கிகொள்ள சொல்லிவிட்டார் என்று சொன்னார். நான் அதற்கு சரிங்க சார் என்று சொல்லி விட்டு, என் நண்பர் முருகேசனுடன் வந்துவிட்டேன். எனக்கு மேற்படி மண்டல துணை வட்டாட்சியர் திரு.செல்வகணபதி, கந்தர்வக்கோட்டை பிர்கா சர்வேயர் திரு.முத்து மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோம் ஆகியோர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/– கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பமில்லை. அதனால் நான் எனது நண்பர் முருகேசனுடன் இன்று 02.12.2020–ஆம் தேதி என்னிடம் ரூ.15,000/– லஞ்சம் கேட்ட மேற்படி மண்டல துணை வட்டாட்சியர் திரு.செல்வகணபதி, கந்தர்வக்கோட்டை பிர்கா சர்வேயர் திரு.முத்து மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெரோம் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அய்யா அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) அ.ராஜீவ்காந்தி, 02.12.2020.

Sir, Received the above computer typed complaint on 02.12.2020 at 08.45. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.09/2020 u/s 7 (a) of Prevention of Corruption Amendment Act-2018 at 09.15 hrs today

on 02.12.2020 and took up for investigation. (Sd-) G.Manikandan, DSP, /V&AC/PK.

Original FIR along with Original Computer type complaint of Tr.A.Rajeevgandthi, S/o Ayyamuthu, No.96/32A, North Street, Gomapuram Village, Gandarvakkottai Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge for trial of case under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

DSP
2/12/20
(G.MANIKANDAN)